**SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM**



ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்
(ஸ்ரீமத் மைசூராண்டவன்)

# ஆச்ரம வரலாறு
# ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன்
# ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன்

**Anugraham**



**Pitadhipathi Srimad Andavan SriVaraha MahaDesikan**

© Srirangam Srimad Andavan Ashramam

Document redesigned and republished using
**Google Translate** and **TT28 Publisher** @ **www.aradhanam.org**

Sri

Srimathe Rangaramanuja Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Vedantha Ramanuja Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Mahadesikaya Namaha
Srimathe Srinivasa Mahadeiskaya Namaha
Srimathe Nigamantha Mahadesikaya Namaha
Srimathe Bhghawathe Bashyakaraya Mahadesikaya Namaha
Srimathe Ranganatha Divyamani Padukabyam Namaha

SRIRANGAM
SRIMAD ANDAVAN ASHRAMAM

H.Qrs. Melur Road, Srirangam, Tiruchirappalli - 620 006
Phone : 0431-2432379

Camp : B'lore
Date : 17/8/2009

ஸ்ரீரங்கம்

மைசூர் ஆண்டவன் என்ற ஆசார்யன்
வேத வேதார்த்த வேதாந்தங்களில் வல்லவர்,
ஸாஹித்ய - வ்யாகரண - மீமாம்ஸையில்
நல்ல ஞானமுள்ளவர், சிறந்த ஆசுகவி,
கன்னடம், தமிழ், ஹிந்தி மொழிகளிலும்
புலமை நிறைந்தவர், அவற்றில் பல நூல்களை
யாத்துள்ளார், பலவற்றை மொழிபெயர்த்துள்ளார்,
சாந்தர், ஆசாரசீலர், எல்லாவற்றுக்கும் மேலாக
ஆத்ம குணமுள்ளவர், சிறந்த நல்லாசிரியர்,
பகைவர்களிடத்தும் அருட்குணம் உடையவர்.
சுருங்கச் சொன்னால் இம்மாதிரியான மாணிடரைப்
பார்ப்பது அரிது. மேலும் இந்த ஆச்ரமத்தின்
ஸ்ரீகார்யமாக இருந்து நற்பணிகள் பலவற்றைச்
செய்துள்ளார். இந்த அவருடைய ஸதமான
மஹோத்ஸவ ஸமயத்தில் அவரை மானஸீகமாக
தெண்டன் ஸமர்ப்பிப்பது எல்லாருக்குமே நன்மை
பயக்கும் என்று கூறி நாராயணஸ்ம்ருதி செய்கிறேன்
நாராயண! நாராயண!! நாராயண

இத்
ஸ்ரீரங்க ராமானுஜ யதி

# ஆச்ரம வரலாறு

# ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன் ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன்

ஸ்ரீவாஸலக்ஷ்மணயதிம் ஸ்மரணீய ஸ்ரீலம்
ஆசார்ய பக்தி பரிபூர்ணம் அநர்க போதம் |
ஸாந்த்யாத்யகல்மஷகுணை: ஸ்ப்ருஹணீய பாவம்
வைராக்ய பக்தி ரஸிகம் கவிம் ஆநதோஸ்மி ||

श्रीवासलक्ष्मणयतिं स्मरणीय शीलम्
आचार्य भक्ति परिपूर्णमनर्घ बोधम् ।
शान्त्यात्यकल्मषगुणैः स्पृहणीय भावम्
वैराग्य भक्ति रसिकम् कविमानतोऽस्मि ॥

எப்போதும் நினைத்திருக்கத் தகும் சரித்தினத்தினரும், ஆசார்ய பக்தி நிறைந்தவரும், விலைமதிக்கவரிய ஞானம் உடையவரும், களங்கமற்ற சாந்தி முதலிய குணங்களால் விரும்பத்தகு மனோபாவத்தினரும், வைராக்யத்தையும் பகவத் பக்தியையும் ரஸிப்பவரும், சிறந்த கவியும் ஆன ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன் ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகனை ஸேவிக்கிறேன். - **ஆசார்ய ராமாம்ருதம் முன்னுரை**

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் பெரியாச்ரம பரம்பரையில் வந்தவதரித்தருளிய அதி விலக்ஷணமான ஆசார்யர்களின் வரிசையில் பத்தாவது பீடாதிபதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகனின் திவ்ய சரித்ரம் எழுதப் படுகிறது.

**********

ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன்
ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேபரிகனின் திவ்ய சரிதம்

# அவதாரம்

ஸ்ரீமத் மைசூர் ஆண்டவனுக்கு பூர்வாச்ரமத்தில் **ஸ்ரீ ஹரிஹரபுரம் கோபாலாசார்யர்** என்கிற திருநாமம். ஸௌம்ய வர்ஷம் ஆவணி மாதம் உத்தர பல்குனீ நக்ஷத்ரத்தில் 19 - 8 -1909 அன்று பரம வைதிகரான வித்வான் ஸ்ரீ க்ருஷ்ணமா சார்யர், ஸ்ரீமதி ரங்கநாயகம்மா தம்பதியினருக்கு திருக்குமாரராக அவதரித்தார். கௌண்டின்ய கோத்ரம். இவருடைய அவதார க்ஷேத்ரம் கர்நடக தேசத்தில் நரசிம்ஹபுரம் தாலுக்காவில் காவிரியும் கபில நதியும் ஸங்கமிக்கும் ஸ்தலத்தில் ஸோஸலை க்ராமத்திலாகும். பூர்வாச்ரமத்தில் நம் ஸ்வாமிக்கு இரு ஸஹோதரர்களும் இரு ஸஹோதரிகளும் உண்டு.

# வித்யாப்யாஸம்


பாலப் பிராயத்தே திருத்தகப்பனாரை இழந்து வறுமையுற்றாலும் தம்முடைய அந்யாத்ருசமான மேதாவிசேஷத்தால் உயர் நிலைப் பள்ளியில் படித்து மைஸூர் மஹாராஜாவின் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் சேர்ந்து ஸாஹித்ய வ்யாகரண சிரோமணிகளில் தேறினார். அப்போதைய ஸ்ரீபரகால ஜீயர் அபிநவ ரங்கநாத மஹாதேசிகன் நம் ஸ்வாமியின் மேதாவிலாஸத்தைக் கடாக்ஷித்து ஸ்ரீபரகால மடத்தின் ஆஹாராதி வஸதிகளுடன் நம் ஸ்வாமி வித்யாப்யாஸம் செய்ய க்ருபை செய்தருளினார். குடும்ப பரணச்ரமமின்றி வித்யாப்யாஸத்திலேயே கவனமாக இருக்க நம் ஸ்வாமிக்காக நம் ஸ்வாமியின் ஸஹோதர ஸஹோதரிகளுக்கும் படி அளித்தருளி அவர்களின் வித்யாப்யாஸத்திற்கும் ஸ்ரீ பரகால ஜீயர் அனுக்ரஹித்தாயிற்றாம்.

கன்னட பண்டிட், ஹிந்தி பண்டிட் படிப்புகளில் அநாயாஸமாகத் தேறிய நம் ஸ்வாமி பூர்ணமாக அருளிச்செயலையும், அநேக வேத பாகங்களையும் விடாது அத்யயனம் செய்ததோடன்றி அபாரமான

ஸாஹித்ய ஜ்நானத்தையும் வளர்த்துக்கொண்டார். வேதாந்த சிரோமணியும் வாசித்து பரீக்ஷையில் தேறினார்.

## ஆசார்யஸம்பந்தம்

பதினாலு திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீநம்மாண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் திருவடிகளில் அன்வயித்து பஞ்சஸம்ஸ்காரமும் பரந்யாஸமும் அருளப் பெற்று விசேஷ ஆசார்ய கடாக்ஷம் பெற்றார். அச் சிறு பிராயத்திலேயே ஆசார்ய பக்தி விசேஷ பரவசராய் ஸ்ரீமந் நம்மாண்டவன் வைபவத்தை 134 ஸம்ஸ்க்ருத ச்லோகங்களில் ஸ்ரீமத் ஆண்டவன் வைபவம் என்ற ஸ்தோத்ரத்தை அருளிச் செய்தாயிற்று. வித்வத் விசேஷத்தால் சிறு பிராயத்திலிருந்தே மைஸூர் வித்வான் கோபு என்று பண்டித உலகத்தில் ப்ரஸித்தி அடைந்தார்.




Srimad Sri Mysore Andavan’s Purvashrama Photo

# க்ருஹஸ்தாச்ரமம்

தலைக்காடு எனும் க்ஷேத்ரத்தைச் சேர்ந்த மிக ஆசாரமான குடும்பம் ஸ்வாமியின் வேட்டகம். பூர்வாச்ரம தேவிகளுக்கு ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி என்ற திருநாமம்.ஆறு புத்ரிகளும் இரண்டு புத்ரர்களும் ஜனித்தனர்.

ஸோஸலை அக்ரஹாரத்தின் புகழ் மிக்க பண்டிதராக விளங்கிய மைஸூர் கோபாலாசார்யர் அத்தலத்தின் ஸ்ரீ வேணுகோபாலப் பெருமாள் திருக்கோவிலின் ஸகல வைபவங்களையும் பெருமுயற்சி செய்து சிறப்பாக நடத்தினார்.

மைஸூர்ராஜ்யத்தின் ஸாகலேஷ் புரத்தில் பள்ளிக்கூட உபாத்யாயராக 1945 முதல் 1975 வரை இருந்தார்.

ஆச்ரம விச்வாஸம், வேதாந்த காலக்ஷேபம், ஆசார்ய பக்தி:- பல வித்வான்களிடமும் மஹாபண்டிதர்களிடத்தும் அத்யயனம், காவ்யாப்யாஸம், சாஸ்த்ராப்யாஸங்கள் பலவும் பெற்றிருந்தாலும், ஆண்டவன் ஆச்ரம சம்ப்ரதாய பரவசராய் அத்யந்த மஹாவிச்வாஸத்துடன் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் திருவடியில் க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபங்களையும் உபநிஷத் பாஷ்ய காலக்ஷேபமும் வாய்க்கப் பெற்றவர் நம் ஸ்வாமி.

மஹோந்நதமான சிந்தனைகளும், அபார ஆசார்ய பக்தியும், பண்டிதர்கள் வியக்கும் மேதாவிலாஸமும், பரம சாந்தமான கார்ய க்ரம வைகரிகளும், விடா முயற்சியும் மைஸூர் வித்வான் கோபாலாசார்யரின் தனிச் சிறப்புகளாகும்.

75 வர்ஷங்களுக்கு முன் ஸத்ய மங்கலம் காடுகளின் கடுமையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

நம் மைஸூர் வித்வான் கோபாலாசார்யர் அந்த நாளில் ஸோஸலையிலிருந்து சைக்கிளில் புறப்பட்டு வழி நெடுக ஆங்காங்கே ஸ்ரீபாதுகாராதனத்திற்குத் தகுந்த ஏற்பாடுகளை செய்து ஸத்யமங்கலம்,

ஈரோடு மார்க்கமாக ஸ்ரீரங்கம் சேர்ந்து ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவனை அங்கிருந்து கர்நாடக தேசத்திற்கு பாதயாத்ரையாக எழுந்தருளப் பண்ணுவித்த ஸாஹஸம் யாரைத்தான் வியக்கச் செய்யாது? இத்தனைக்கும் காசு பணம் உள்ளவர் இல்லை. ஆசார்ய பக்திக்கு எல்லை என்பது கிடையாது என்பதற்கு ஸ்வாமியே நிதர்சன மஹாபுருஷர்.

நம் ஆச்ரமத்தின் எட்டாவது பீடாதிபதியான ஸ்ரீமத் தென்பிறை ஆண்டவன் ஸ்ரீரங்க நாத மஹாதேசிகன் தம் திருமேனி தளர்ந்தவாறே மூன்று சிஷ்யர்களுக்கு ப்ரேஷ மந்த்ரத்தையும் ஸந்யாஸி தர்மாநுஷ்டானத்தையும் உபதேசித்தாயிற்று. அவர்கள் ஸ்ரீகண்ணன் ஸ்வாமி என்று ப்ரஸித்தரான ஸ்ரீதிருக்குடந்தை ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், ஸ்ரீ மைஸூர் கோபாலாசார்யர், ஸ்ரீ மன்னார்குடி கனபாடி நரஸிம்ஹாசார்யர்.

ஒன்பதாவது பீடாதிபதியாக 5 - 4 -1963 ல் ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி உலகம் நிறைந்த புகழாளராக ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீமத் வேதந்த ராமாநுஜ மஹாதேசிகன் என்ற திருநாமத்துடன் பட்டமேற்று பாரெல்லாம் கொண்டாட பாரதமெங்கும் பாதயாத்ரை செய்து ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரம ஸம்ப்ரதாயத்தை நிலை நாட்டிய பொற்காலத்தில் சித்ரகூடம் ஸ்ரீ விஜய ராகவாசார்யருக்குப் பின் சுமார் இருபது வர்ஷங்கள் நம் ஆச்ரமத்தின் ஸ்ரீகார்ய துரந்தரராக மைஸூர் வித்வான் ஸ்ரீ கோபாலாசார்யர் எழுந்தருளியிருந்து ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனுடன் பலகாலும் கூடவே பாத யாத்ரையும் ஆச்ரம நிர்வாஹத்தையும் செய்து கொண்டு அணுக்கரான அந்தரங்க கைங்கர்யபரராக எழுந்தருளியிருந்தார்.

விடாமுயற்சியும், அடக்கமும், அநுஷ்டானமும், அபார ஜ்நானமும், ஆசார்ய பக்தியும், பரம சாந்தமான செயல் முறைகளும், தூய உள்ளமும், பன் மொழிப் புலமையும் நம் மைஸூர் வித்வான் கோபாலாசார்யரின் தனிச் சிறப்புகள்.

# க்ரந்த நிர்மாணம்

ஸ்வாமியின் க்ரந்தங்கள் அனேகம். குறிப்பாக கன்னட ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பரமோபகாரம் செய்துள்ளார்.

1. ப்ரபந்ந காயத்ரியான ராமானுச நூற்றந்தாதியை கன்னடத்தில் மொழி பெயர்த்து இயற்றி கன்னட வ்யாக்யானமும் அருளினார்.

2. பகவத் ராமானுஜர் விஷயமாக ஸ்ரீ ராமாநுஜ பஞ்சாரத்தை ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றினார்.

3. ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தை கன்னடத்தில் மொழிபெயர்த்து இயற்றி முழுமையான கன்னட வ்யாக்யானத்தையும் எழுதினார். ஸ்ரீ பரகால மடத்தில் இந்த 465 பக்கங்கள் கொண்ட புத்தகம் அச்சாகி வெளியிடப் பட்டது.

4. ஸ்வாமி தேசிகனின் தமிழ் ப்ரபந்தங்களை ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றி கன்னட வ்யாக்யானம் அருளிச் செய்தார்.

5. ஸ்ரீமத் ஆசார்ய பரம்பரா ப்ரபாவம் என்னும் கன்னட நூலை அருளிச் செய்தார்.

6. நம் ஆண்டவன் ஆச்ரம ஆசார்ய பரம்பரை தனியன் மற்றும் சாற்றுமறை க்ரமத்தையும் சிறு நூலாக வெளியிட்டாயிற்று.

7. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாஷ்யத்தை சுருக்கமாக அருளிச் செய்தாயிற்று.

8. ஸ்ரக்த்தரா பாதகம் என்னும் நூலையும் அருளியாயிற்று.

9. ஸம்பூர்ணமான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தை ஸம்ஸ்க்ருத ச்லோகங்களாக அருளிச் செய்தாயிற்று. இந்த மஹாக்ரந்தத்தை ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீரங்க ராமாநுஜ

மஹாதேசிகன் விலக்ஷணமாக அச்சேற்றி தற்போது ஆச்ரமத்தில் கிடைக்கிறது.


10. ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருமேனியில் நோவு சாற்றியிருந்தபோது 108 திவ்யதேச அர்ச்சாவதார தாயார்களை ப்ரார்த்தித்து ஸ்ரீமஹாலக்ஷ்மீ ஸ்துதி இயற்றியாயிற்று.

11. திருவாய்மொழிக்கு பூர்வாசார்ய பத்ததியை அடியொற்றி சுருக்கமான வ்யாக்யானம் செய்தாயிற்று.

12. ஸ்வாமி தேசிகனின் அநேக ஸ்ரீஸூக்திகளை கன்னடத்தில் மொழி பெயர்த்தாயிற்று.

மைஸூர் வித்வான் கோபாலாசார்யர் உத்தம ஆசு கவியாய், மஹாபண்டிதராய், அத்புத க்ரந்த நிர்மாதாவாய் எழுந்தருளியிருந்தார். மாநில மத்திய அரசுகள் இவரின் பாண்டித்யதைப் பாராட்டி கௌரவித்தன. பாரத ராஷ்ட்ரபதி ஸுவர்ண பதக்கம் அளித்து கௌரவித்தார்.

# ஆசார்ய பீடம்



ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்



திரிதண்டம் அனுக்ரஹித்தல்



ஈக்ஷணாத்ரய ஸங்கல்பம்



நீராட்டம் கண்டருளி எழுந்தருளுதல்

Srimad Sri Mysore Andavan's Ashrama Sveekaram



ஸ்ரீமதாண்டவனை சேவிக்க எழுந்தருளுதல்



82ஆவது திருநக்ஷத்திரத்தில ஸ்ரீமதழகியசிங்கரும் ஸ்ரீமதாண்டவனும்



82ஆவது திருநக்ஷத்திரத்தில ஸ்ரீமதழகியசிங்கரும் ஸ்ரீமதாண்டவனும்



இரண்டு ஆச்சார்யர்களுக்கும் மாலை மரியாதை

Srimad Sri Mysore Andavan’s Ashrama Sveekaram

# ஆசார்ய பீடம்

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனின் திருமேனி தளர்ந்தவாறே மைஸூர் வித்வான் ஸ்ரீகோபாலாசார்யருக்கு 11.4.1988 ப்ரபவ வர்ஷம் பங்குனி மாதம் 29, ச்ரவண நக்ஷத்ரம், நவமி, திங்கட் கிழமை ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரத்தை ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் அளித்தாயிற்று. காஷாய, த்ரிதண்டங்களை ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனின் திருக்கரத்தால் பெற்று ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் எனும் திருநாமத்துடன் 10 ஆவது பீடாதிபதியாய் எழுந்தருளி ஸ்ரீபாதுகாராதனம், சிஷ்ய ஸம்ரக்ஷணங்களை செய்தருளியாயிற்று.

எனினும் ஓராண்டுக்குப் பிறகு 10.4.1989 விபவ வர்ஷம், பங்குனி சுக்ல பஞ்சமி, திங்கட் கிழமை ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருநாடலங்கரித்த பின் 42 தினங்களில் 22.5.1989 வைகாசி க்ருஷ்ண த்விதீயை அன்று ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவனும் திருநாடலங்கரித்தாயிற்று. கனத்த உள்ளத்துடன் பெருந்திரளான சிஷ்யர்கள் ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவனின் திருமேனியை ஸ்ரீரங்கம் சின்னாச்ரமத்தில் ப்ருந்தாவனத்தில் எழுந்தருளப் பண்ணினர். சரம கைங்கர்யங்களை ஸ்வாமியின் பூர்வாச்ரம திருக்குமாரரைக் கொண்டு முன்னர் ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவனுக்கு எப்படி அதி விஸ்தாரமாக நடந்ததோ அதே போலவே பெரும் செலவில் ஸ்ரீரங்கம் ஆச்ரமத்தில் நடை பெற்றது. ஸ்ரீரங்கம் திரு வீதிகளில் இயல் கோஷ்டி வீதி நிரம்ப ஸ்ரீவைஷ்ணவர்களின் திரளாயிருந்தது.

அடக்கமும் அமைதியும் வடிவெடுத்த பாண்டித்ய விசேஷத்தை உடைய ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவனின் மஹிமை அருகிருந்து அநுபவித்த பாக்யவான்களுக்கே அறியக்கிடைத்தது.

ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவனின் ப்ரபாவத்தை ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் பல ஸமயங்களில் ச்லாகித்தாகும். தமக்கான ஸகல கௌரவங்களையும் ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவனுக்கும் அளிக்கவேண்டும் என்று ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் தம் திருக்கரத்தாலேயே உயில் சாஸனம் செய்துள்ளபடி.

ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவனின் ஜ்நான பக்தி வைராக்ய வைசிஷ்ட்யங்கள் இந்த ஆசார்யரின் க்ரந்தங்களில் என்றும் நிலைத்துள்ளதை ஸேவிக்கிறோம்.